**தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) - 2015.**

தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டத்தின் (37 பிரதான பாலங்கள் நிர்மாணச் செயற்திட்டம்) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மார்ச் 14 ஆம் திகதிய எஸ்எல்-பி 108 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. தேசிய வீதிகளில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதன் மூலம் தேசிய வீதி வலையமைப்பை முன்னேற்றுவதும் அதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல் செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,250 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 16,132 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 20,914 மில்லியனிற்குச் சமமான ஜப்பான் யென் 12,381 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மார்ச் மாதத்தில் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூலை மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 2,637.66 மில்லியன் பெறுமதியான புத்துருவாகும் வேலை ரூபா 1,113.15 மில்லியன் கூட்டுத்தொகையான நானாவித முற்பண மீதிகள், ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டிய தேறிய மீதி மற்றும் முன்கொடுப்பனவுகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று யதார்த்தமாக தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கள், மதியுரைஞர்களுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றின் மீதான காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட உரிய திரண்ட மீதிகளின் மாற்றங்களுடன் இணங்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து பெறவேண்டிய மீதிகள் மற்றும் அவற்றிற்கு கொடுக்கவேண்டிய மீதிகள் காலத்திற்குக்காலம் இணக்கம் செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட மீதிகளின் வித்தியாசங்கள் கீழே தரப்படுகின்றன.

| ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் பெயர் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி | | வித்தியாசம் |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்தின் பதிவேடுகளின் பிரகாரம் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25 பாலங்களின் மீள்நிர்மாணச் செயற்திட்டம் | 1.42 | 0.67 | 0.75 |
| விவேக போக்குவரத்து முறைமை செயற்திட்டம் | 18.65 | 2.09 | 16.56 |
| வறுமை சார்ந்த கிழக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 3.01 | இல்லை | 3.01 |
| மண்முனை பால நிர்மாணச் செயற்திட்டம் | 5.64 | இல்லை | 5.64 |

**2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியில் மேற்கொள்ளப்பட்டுள்ள அறிவுறுத்தல்களிற்கு முரணாக மேந்தலைக் கட்டணங்களாக வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு செயற்திட்டத்தால் ரூபா 1.53 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் | ஜப்பான் யென் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜேஜசீஏ | 12,381 | 20,914 | 3,000.00 | 1,754.77 | 2,098.71 | 1,944.70 | 2,325.86 |
| இலங்கை அரசாங்கம் | 3,751 | 6,336 | 55.12 | 45.97 | 54.98 | 90.67 | 108.44 |
| | **16,132** | **27,250** | **3,055.12** | **1,800.74** | **2,153.69** | **2,035.37** | **2,434.30** |

மேற்கூறப்பட்ட நிதியளித்தல் ஒமுங்குகளிற்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ரூபா 85 மில்லியன் கடன் பெறுகைகளும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் பெறுகைகளின் பயன்பாட்டு விபரங்கள் மற்றும் மீள்கொடுப்பனவு ஒழுங்குகள் போன்றன கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் பொதி–I இன் கீழ் தென் மாகாணத்தில் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள 10 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் 2015 மார்ச் 20 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது உரிய பாலங்களின் விபரமான வடிவமைப்புக்களின் தயாரிப்பு பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் பொதி–II இன் கீழ் வடக்கு மாகாணத்திலுள்ள ஏனைய 08 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பொதிகள் III மற்றும் IV இன் கீழான ஏனைய பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் ஆரம்ப வடிவமைத்தல் கட்டத்திலேயே இருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

மேற்குறிப்பிடப்பட்டவாறு செயற்திட்டத்தின் பொதி–I இன் கீழ் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலுள்ள 10 பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் பொதி–I இன் கீழான ரூபா 532.77 மில்லியனில் பெறுமதியிடப்பட்ட 25 முரண் கட்டளைகள் மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.3 ஆம் பந்தி மூலம் வேண்டப்பட்டவாறு பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடமிருந்து வேலை நோக்கெல்லைகளின் முரண்களிற்கான முன்னங்கீகாரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அவற்றில் ரூபா 20.25 மில்லியன் தொகை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) மூல திட்டத்தில் காண்பிக்கப்பட்ட பல பிரதான பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் செயற்திட்டத்தால் பின்னர் நீக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத ஏனைய பாலங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன என அவதானிக்கப்பட்டது. ஆகையால், காலி மாவட்டத்திலுள்ள பாலங்களின் மீள்நிர்மாணத்தின் மூல திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஹல்பதோட்ட பாலம் நீக்கப்பட்டு மூல திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத மாத்தறை மாவட்டத்திலுள்ள வெள்ளமடம பாலம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) காலி மாவட்டத்திலுள்ள கிஹிம்பியெல பாலத்தின் நிலத்தூண் அத்திவார வடிவமைப்புக்களானது ஆரம்ப கட்டங்களில் நில அளவைகள் தவறாக செய்யப்பட்டமையின் காரணமாக மாற்றப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 22.35 மில்லியன் மேலதிகக் கிரயம் செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 காணி சுவீகரிப்பு மற்றும் செயற்திட்டத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள்

செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் பொதி–I இன் கீழான காணி சுவீகரிப்பு செய்முறை 2015 மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்தது. 05 பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 242 காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்கு செயற்திட்டம் இலக்கிட்டிருந்ததுடன் அவற்றில் 233 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தது. 137 காணித்துண்டுகளிற்காக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.09 மில்லியன் தொகையான இழப்பீடு

செலுத்தப்பட்டிருந்தது. மேலும், எந்தக் காணித்துண்டுகளினதும் உரிமைத்துவம் காணி சுவீகரித்தல் அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் உரிய பிரதேச செயலாளர்களிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

ரூபா 13.39 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிலுள்ள காலதாமதம் காரணமாக பணவளிப்பற்ற கடன் மீதி மீது கடன் வழங்கும் முகவரால் அறவிடப்பட்டிருந்தது.

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 62 பதவியணி நிலைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் பதவியணி 31 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 02 பிரதம பொறியியலாளர்கள், 07 செயற்திட்டப் பொறியியலாளர்கள், 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகிய முக்கிய பதவிகள் உள்ளடங்கிய பதவிகளிற்காக 41 வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிரப்பப்படாது காணப்பட்டன. மேலும், 04 மதியுரைஞர்கள், 03 பொதுத் தொடர்பு உத்தியோகத்தர்கள், 03 இலகு உபகரண செயற்படுத்துனர்கள் உள்ளடங்கலாக 15 ஊழியர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பதவிகளிற்காக வேலையில் ஈடுத்தப்பட்டிருந்தனர்.